

# முகிலன் எங்கே?

## ஹென்றி திபேன் அறிக்கை

மனித உரிமை காவலர் முகிலனைப் பற்றி அரசு அமைதியாக இருக்கிறது. பத்திரிகையாளர் சந்திப்பில் 22 மே, 2018 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஸ்டெர்லைட் போராட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் காவல்துறைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பங்கு குறித்து ஆதாரப்பூர்வமாக எடுத்து வைத்ததற்கு பின்னர் அவர் காணாமல் போயிருப்பது நினைவில் கொள்ள வேண்டும். பத்திரிகையாளர் சந்திப்பில் பெருமளவு நிருபர்கள் கலந்து கொண்ட பின்பும் இந்த செய்தி குறித்து ஏன் பிரசுரிக்கவில்லை? மிகுந்த வருத்தமளிக்கிறது. வாட்சப் குருப்களில் இந்த செய்தியை உங்கள் பெயரில் பரப்புங்கள்.

முகிலன் தமிழ்நாட்டைச் சார்ந்த மனித உரிமைக் காவலர். நாம் அவரைக் காக்க வேண்டிய கடமை உள்ளது. காவல்துறையில் அளித்த புகார்களுக்கு காவல்துறையிடம் இருந்து எந்தவித பதிலும் இல்லை என்பது வருத்தமளிக்கிறது. தலைமைச் செயலர், காவல்துறை இயக்குனர், காவல்துறை துணை இயக்குனர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), காவல்துறைத் தலைவர் (வடக்கு), காவல்துறை ஆணையர் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு இணையதளப் புகார்களும் அனுப்பப்பட்டன. முகிலன் மகன் மற்றும் நண்பர்கள் சார்பில் பல்வேறு அதிகாரிகளுக்கு புகார்கள் தரப்பட்டுள்ளன.

இதுவே தமிழ்நாட்டில் மனித உரிமை போராளிகளின் நிலைமை. நம்முடைய மாநிலத்தின் பெருமை காக்க ஒற்றுமையை வெளிக்காட்ட வேண்டிய தருணம் இது. முகிலனின் மனைவி மகன் குடும்பத்திற்கு நம் பதில் என்ன? அவர் எங்கு அடைக்கப்பட்டு இருந்தாலும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்காக நாம் போராட வேண்டும். உயர்நீதிமன்றம் இதை தானாக முன் வந்து விசாரிக்காதா? மாநில மனித உரிமைகள் ஆணையம் தானாக முன்வந்து விசாரிக்கக் கூடாதா?

முகநூல் வாட்சப் போன்றவற்றில் இச்செய்தியை கொண்டுபோய் சேர்ப்பதே குறைந்தபட்சம் நம்மால் செய்யக் கூடியது. இது செயலாற்ற வேண்டிய தருணம். முகிலன் யார்? அவரது கொள்கை என்ன? என்பதை குறித்து விவாதிப்பதைத் தவிர்த்து மனித உரிமைகளுக்காக போராடிய முகிலனை பாதுகாக்க வேண்டிய கடமை முன்னிற்கிறது. இப்போது இல்லையென்றால் வேறு எப்போது?

### வாழ்த்துகள்! வைகோ....

மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு வாழ்த்துகள். இறுதியாக நீங்கள் ஸ்டெர்லைட் வழக்கில் வெற்றி பெற்றுவிட்டீர்கள். உங்களது ஆண்டுக்கணக்கான அயராத உழைப்புதான் நமக்கு இந்த வெற்றியைத் தேடித்தந்திருக்கிறது. மேலும் பல வெற்றிகளை தாங்கள் அடைய வேண்டிய தருணம் இது. நீதியரசர் நாரிமனைப் போன்றவர்கள் உங்களின் மதிப்பை அறிந்து பெருமை கொள்ள நீங்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டும்.